www.Padasalai.Net

**11 - STD** இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2022

நேரம்: 1.30 **வரலாறு** மதிப்பெண்கள்: 50

## பகுதி - I

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடைளிக்கவும்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **10x1=10**

1. கிருஷ்ணதேவராயர் தன்வெற்றிகளின் நினைவாக வெற்றித் தூணை எழுப்பிய இடம்___
   (அ) பெல்காம் (ஆ) கட்டாக் (இ) சிம்மாச்சலம் (ஈ) இராஜமகேந்திரவரம்
2. ________ கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்.
   (அ) இராஜா கிருஷ்ண தேவ் (ஆ) சுல்தான் குலி-குதுப்-உல்-முல்க்
   (இ) முகமது கவான் (ஈ) பாமன்ஷா
3. சமண மதத்திலிருந்தபோது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார்
   (அ அரிசேனா (ஆ) தீர்த்தங்கரர் (இ) சிவஞான சித்தியார் (ஈ) தர்மசேனர்
4. பொருத்துக:
   (i) கபீர் - 1. சாகித்திய லாகிரி (ii) சூர்தாஸ் - 2. ஷேக் தாதி
   (iii) சூபியிஸம் - 3. சம்பந்தர் (iv) கூன் பாண்டியன் - 4. நெசவாளர்
   (அ) 2, 3, 4, 1 (ஆ) 4, 1, 2, 3, (இ) 2, 4, 3, 1 (ஈ) 3, 4, 2, 1
5. 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட் போரில் ஐ பாபர் ______ யை திறம்பட பயன்படுத்தியதின் மூலம் வெற்றி பெற்றார்
   (அ) காலாட்படை (ஆ) குதிரைப்படை (இ) பீரங்கிப் படை (ஈ) யானைப்படை
6. ____________ சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.
   (அ) ஆக்ராவை (ஆ) குவாலியரை (இ) தில்லியை (ஈ) மதுராவை
7. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் _________ க்கும் இடையே கையெழுத்தானது.
   (அ) அஃப்சல்கான் (ஆ) செயிஷ்டகான் (இ) ஜெய்சிங் (ஈ) ஔரங்கசீப்
8. கோகினூர் வைரத்தை ___________ எடுத்துச் சென்றார்.
   (அ) அஹமது ஷா அப்தலி (ஆ) நாதிர் ஷா
   (இ) ஷுஜா-உத்-தௌலா (ஈ) நஜீப்-உத்-தௌலா
9. இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம் ________ ஆகும்.
   (அ) கோவா (ஆ) டையூ (இ) டாமன் (ஈ) சூரத்
10. நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர்
    (அ) பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா (ஆ) அல்போன்ஸோ டி அல்புகர்க்
    (இ) நீனோ டா குன்கா (ஈ) ஆன்டோனியோ டி நாரான்கா

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் நான்கிற்கு விடையளிக்கவும் , வினா எண் 15 - ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

**குறுகிய விடை தருக** **4x2=8**

11. நாயக்க அரசுகள் யாவை? அவை நிறுவப்பட காரணம் என்ன?
12. புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net

13. அக்பர் பைராம்கானை எவ்வாறு கையாண்டார்?
14. இராமானந்தரின் போதனைகள் யாவை?
15. தராப் பற்றி எழுதுக.
16. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டியது எது?

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் நான்கிற்கு விடையளிக்கவும் ,வினா எண் 20 .ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**சுருக்கமான விடை தருக** **4x3=12**

17. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?
18. மத மறுமலர்ச்சியின் உறைவிடமாகத் தென்னிந்தியா விளங்கியதை விளக்குக.
19. மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்களை எழுதுக.
20. "தீன் இலாஹி" பற்றி நீவிர் அறிவது யாது
21. 1565ஆம் ஆண்டுக்குப் பிறகு தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைக் கூறு?
22. ராக்சஷி தங்கடி போர் பற்றி விவரி.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

**விரிவான விடை தருக** **4x5=20**

23. (அ) இந்தியாவில் போர்த்துகீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கத்தை விவரி

(அல்லது )

(ஆ) விஜயநகரப் பேரரசின் சமுக மற்றும் பொருளாதார நிலையினை விவரி.

24. (அ) சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழி வகுத்தது?

(அல்லது )

(ஆ) "வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" - விளக்குக.

25. (அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

(அல்லது )

(ஆ) முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றிக் குறிப்பு வரைக.

26. (அ) ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை எவ்வாறு முகலாயப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்தது?

(அல்லது)

(ஆ) முதலாம் பாஜிராவ் வாழ்க்கையையும் சாதனையையும் பற்றி விவாதிக்கவும்.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

CamScanner